சேலம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

மூ.மு.எண்.015007/ஆ2/2020 நாள். 16 .02.2021

பொருள்: தமிழ்நாடு பள்ளிக்கல்வி அமைச்சுப்பணி – பணிவரன்முறை – சேலம் மாவட்டம், சேலம் ஊரகம் கல்வி மாவட்டம், தொளசம்பட்டி, பேரறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளி – இளநிலை உதவியாளர் திரு.செ.விஜயன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – சார்பு.

பார்வை:
1. அரசாணை எண். 101 பள்ளிக் கல்வி (வரவு செலவு–1)த் துறை நாள்.18.05.2018.
2. சேலம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.21522/ஆ2/2019, நாள்.24.02.2019.
3. சேலம் ஊரகம் மாவட்டக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.5042/அ1/2020, நாள்.11.12.2020.

-------

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வை 2 இல் காணும் செயல்முறைகளின்படி சேலம் மாவட்டம், சேலம் ஊரகம் கல்வி மாவட்டத்திற்குட்பட்ட, தொளசம்பட்டி, பேரறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் கீழ்க்காணும் பணியாளருக்கு பணிவரன்முறை கோரும் கருத்துருக்கள் பார்வை 3 இல் காணும் சேலம் ஊரகம் மாவட்டக் கல்வி அலுவலரின் பரிந்துரை கடிதத்துடன் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியில் கீழ்க்காண் படிவத்தில் உள்ள பெயருக்கெதிரில் கலம் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

தனியர் இளநிலை உதவியாளர் பணியில் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்தை முடித்திடல் வேண்டும்.

தகுதிகாண் பருவ காலத்தில் வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறைத் தேர்வினையும், இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினை (பவானிசாகர் பயிற்சி) முடித்தல் வேண்டும். தகுதிகாண்பருவம் முடித்தமைக்கான ஆணை பெறப்பட்ட பின்னரே இரண்டாவது ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிக்கப்பட வேண்டும்.

| வ.எண் | பணியாளர் பெயர்/பதவி/பணிபுரியும் பள்ளி/அலுவலகம் திரு/திருமதி | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.செ.விஜயன், இளநிலை உதவியாளர், பேரறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளி, தொளசம்பட்டி, சேலம் மாவட்டம். | 04.03.2019 முற்பகல் | 04.03.2019 முற்பகல் |

சென்னை/ சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக்கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018 ஆம் ஆண்டுகளில் தொகுதி IV- இன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டு இந்த பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

தனியரின் கல்விச்சான்றுகள் உண்மைத்தன்மைக்கு உட்பட்டது. பணிவரன்முறை குறித்த பதிவுகள் சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்படவேண்டும். பெறப்பட்ட பணிப்பதிவேடு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் உடன் வழங்குமாறு சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு.

1.அசல் பணிப்பதிவேடு–1.

2. பத்தாம் வகுப்பு அசல் மதிப்பெண் சான்று–1.

3.மேல்நிலை வகுப்பு அசல் மதிப்பெண் சான்று–1.

4.பத்து மற்றும் மேல்நிலை வகுப்பு உண்மைத் தன்மை சான்றுகள் அசல்–2.

5.பணிநியமன ஆணை அசல்–1.

முதன்மைக் கல்வி அலுவலர்,
சேலம்.

பெறுநர்.

சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

நகல்.

1. தலைமையாசிரியர், பேரறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளி, தொளசம்பட்டி, சேலம் மாவட்டம்.

2. மாவட்டக் கல்வி அலுவலர், சேலம் ஊரகம்.